செ.வெ.எண்: 80 28.11.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வட்டியில்லா ரொக்க பயிர்க்கடன்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை மத்திய கூட்டுறவு வங்கி லிட்., கிளையில் கூட்டுறவுத்துறையின் சார்பில் விவசாயிகளுக்கு பயிர்க்கடன்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு பயிர்க்கடன்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கி பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு விவசாயிகளின் கஷ்டத்தை போக்கும் வகையில் கூட்டுறவு வங்கிகளின் மூலம் விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க்கடன்களை ரொக்கமாக வழங்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்திலுள்ள கொடும்பாளூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தை சார்ந்த 5 விவசாயிகளுக்கு அரசாணை எண்:132ன்படி விராலிமலை மத்திய கூட்டுறவு வங்கி லிட்., கிளையில் தலா ரூ.25000 என மொத்தம் ரூ.1.25 இலட்சம் மதிப்பில் வட்டியில்லா பயிர்க்கடன் ரொக்கமாக வழங்கப்பட்டுள்ளது. இதேப்போன்று மாவட்டம் முழுவதும் உள்ள கூட்டுறவு வங்கிகளில் தகுதியுள்ள விவசாயிகளுக்கு ரூ.25000 வட்டியில்லா பயிர்க்கடன் ரொக்கமாக வழங்கப்படும். எனவே அனைத்து விவசாயிகளும் இதனை உரிய முறையில் பெற்று பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம் (கந்தர்வக்கோட்டை), மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.எஸ்.செல்லத்துரை, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திருமதி.ந.மிருணாளினி, இணைப்பதிவாளர் திருமதி.எஸ்.பால்வடிவு, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், ஆத்மா குழுத்தலைவர் திரு.பழனியாண்டி, முன்னாள் ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.திருமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**